மாகாணக்கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்

கல்விப்பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) நிலையறி பரீட்சை – 2021

நிகழ்நிலையாகவும் மென்பிரதியாகவும்


# தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் 11

| 22 | T | I |
|---|---|---|

ஒருமணித்தியாலம்

கவனிக்க:

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(2) 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

- தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. "வண் கவிதை பொழியும் புலவர்." இங்கு **வண்** என்பதன் ஒத்தசொல்
   (1) வன்மை (2) பெரிது (3) வனப்பு (4) கொடை

2. "அணி தேர் புரவி ஆட்பெரும் படையொடு" இங்கு **அணி** என்பதன் ஒத்தசொல்
   (1) ஒழுங்கு (2) வரிசை (3) அழகு (4) அலங்காரம்

3. "பெரிய பரிதாபத்தின் முழு மொத்த வடிவமாய்" இங்கு **பரிதாபம்** என்பதன் எதிர்ச்சொல்
   (1) இரக்கம் (2) கோபம் (3) அதிர்ச்சி (4) கவலை

4. "நகல் எடுக்கும் மெசின்கள் வருவதற்கு முன்னரான ஒருகாலம்" இங்கு **நகல்** என்பதன் எதிர்ச்சொல்
   (1) அசல் (2) போலி (3) பிரதி (4) பகுதி

5. "ஒருமுறை சிநேகிதி ஒருத்தி என்னவோ கேட்க." இங்கு **சிநேகிதி** என்பதன் எதிர்ப்பாற் சொல்
   (1) சகோதரன் (2) மச்சான் (3) சிநேகிதன் (4) பாடினி

**பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

6. "வரகும் எள்ளும் முளைச்சு முதிர்ந்து கிடக்கிற இந்தப் புன்செய் நிலங்களை விட்டுவிட்டுப் போக வேண்டியது தான்" இங்கு புன்செய் என்பது
   (1) கொல்லை நிலம் (2) நெல்வயல் (3) கரும்புத்தோட்டம் (4) புதுநிலம்

7. பின்வருவனவற்றில் தொடர்பற்ற சொற்களின் இணைப்பு
   (1) மரம் - கிளை (2) மான் - கொம்பு (3) ஆறு - நீர் (4) சேவல் - கொண்டை

8. பொருளால் வேறுபட்ட சொற்களைக் கொண்ட தொகுதி
   (1) கேண்மை, கெழுதகைமை, நட்பு (2) சான்றோர், மூத்தோர், அறிவுடையோர்
   (3) பேதை, பெதும்பை, அறிவிலி (4) நைவீர், துயர், வருத்தம்

9. கிம்புரி, குஞ்சரம், களபம் என்னும் சொற்கள் குறிக்கும் பொருள்

(1) சிங்கம் (2) யானை (3) மடங்கல் (4) அரி

10. கம்பியூட்டர் (Computer) என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் சொல்

(1) கணினி (2) கணனி (3) கனிணி (4) கணியம்

11. கீச்சிடும் என்றதொனி குறித்த மரபுப்பெயருக்குப் பொருத்தமற்றது

(1) எலி (2) அணில் (3) குருவி (4) கீரி

12. அன்று பிரபலமாக இருந்த புராண நாடகங்களே படமாக்கப்பட்டன. இங்கு புராணம் என்பது

(1) தொன்மம் (2) காப்பியம் (3) சுயசரிதை (4) வரலாறு

13. மாநகர சபையில் எல்லோர் முன்னிலையிலும் மேயர் உரையாற்றினார். இங்கு மேயர் எனக் குறிப்பிடப்பட்டவர்

(1) ஆணையாளர் (2) பிரதாபர் (3) தலைவர் (4) செயலாளர்

14. கோவில் முன்றலில் புராணக் கதைகளை மக்களுக்கு சுவைபட ஒருவன் பிரசங்கம் செய்தான். இங்கு பிரசங்கம் செய்தவன்

(1) பூசாரி (2) பௌராணிகன் (3) பிரசங்கி (4) விகடகவி

15. எந்நிலையிலும் தன்மானம் இழக்கக் கூடாது என்பதை உணர்த்தும் பழமொழி

(1) இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை (2) எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு

(3) இரக்கப் போனாலும் சிறக்கப் போ (4) கனிந்த பழம் தானே விழும்

16. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது என்ற பழமொழியின் கருத்து

(1) தேருக்கு அச்சாணி முக்கியம்

(2) தேர்ப்பாகன் எல்லாவற்றையும் அவதானிக்க வேண்டும்

(3) முக்கிய கருமங்களைப் பாகனே செய்யவேண்டும்

(4) முக்கியமானவர் இன்றி எக்கருமமும் நடைபெறாது

17. ஒருவரது செயற்பாடுகளை எப்பொழுதும் அவதானிக்கவேண்டும் என்பதற்குப் பொருத்தமான அருஞ்சொற்றொடர்

(1) வைத்தகண் வாங்காமல் பார்ப்பது (2) வழி மேல் விழி வைத்து

(3) நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் (4) ஊனுறக்கமின்றி

18. மக்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்கிறார்கள் தொற்றுநோயின் பெருக்கம் குறித்து அஞ்சத் தேவையில்லை மேற்படி வாக்கியங்களை இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்

(1) எனினும் (2) எனவே (3) அத்துடன் (4) ஆனால்

19. ‘‘ஓடிஓடி ஏலெலோ இழுக்க வேணும் ஐலசா’’ இங்கு ஓடிஓடி என்பது

(1) இரட்டைக்கிளவி

(2) இணைமொழி

(3) அடுக்குத்தொடர்

(4) அடுக்கிடுக்குத்தொடர்

20. ‘‘அது சேமித்து வைத்த பைலைக் கூப்பிட்டேன் அது பேசாமல் கம்மென்று இருந்தது’’. இங்கு ‘கம்’ என்ற ஒலிக்குறிப்புச் சொல் உணர்த்தும் பொருள்

(1) அமைதி (2) அசைவற்றது (3) வெளிப்படாமல் (4) ஆனந்தம்

21. பின்வருவனவற்றில் பகுபதமாக அமைந்தது

(1) மன்னன் (2) நாங்கள் (3) பிறன் (4) வயிறு

22. நான் அந்த நெடுங்கதையை எழுதி முடிக்கும் போது இரவு இரண்டு மணி இருக்கும். இங்கு இடம்பெற்ற மாற்றுப் பெயர் யாது?

(1) நான் (2) அந்த (3) கதை (4) இரண்டு

23. பொய்யிலிருந்து உண்மையை வேறுபடுத்த வேண்டும். இங்கு இடம்பெற்ற ஐந்தாம் வேற்றுமைப் பொருள்

(1) நீங்கல் பொருள் (2) எல்லைப் பொருள்

(3) ஒப்புப் பொருள் (4) ஏதுப் பொருள்

24. பின்வருவனவற்றில் வினைமுற்றுத் தொடர்

(1) மகிழ்ந்தான் ஆடி (2) ஓடினாள் சுமதி

(3) பார்த்து இரசித்தாள் (4) பாலு பாடினான்

25. தோன்றல் விகாரப்புணர்ச்சி இடம்பெற்ற சொல்

(1) தேனருவி (2) கல்லால்

(3) வாட்படை (4) தொடருந்து

26. கூட்டத்திற்குத் தலைமை வகிக்கவில்லை. இங்கு வகிக்கவில்லை என்பது

(1) தன்மை வினைமுற்று (2) முன்னிலை வினைமுற்று

(3) படர்க்கை வினைமுற்று (4) மூவிடத்துக்குமான வினைமுற்று

27. அது தன் சூட்சுமத்தையெல்லாம் மெல்ல அவிழ்த்துவிட்டது. இங்கு இடம்பெற்ற தனி வினையடை

(1) எல்லாம் (2) மெல்ல (3) அவிழ்த்து (4) விட்டது

28. ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும். இங்கு இடம்பெற்ற ஓடுமீன் என்பது

(1) வேற்றுமைத் தொகை (2) பண்புத் தொகை (3) வினைத்தொகை (4) உம்மைத் தொகை

29. பின்வருவனவற்றில் பின்னொட்டு ஏற்காத சொல்

(1) அனுகூலம் (2) குணவதி (3) கொடையாளி (4) பாற்காரன்

**பொருத்தமான உதாரணம் இடம் பெற்றுள்ள சொற்தொகுதியைத் தெரிவு செய்க**

30. (1) பெயர்ச் சொல் : மரம், கடல், அலை
 (2) வினைச் சொல் : கொல், வில், கொள்,
 (3) இடைச் சொல் : தான், இனி, கொண்டு
 (4) உரிச் சொல் : கடி, நனி, ஓடி

31. (1) உயர்திணை : குழந்தை, மனிதர், தேவர்
 (2) அ∴றிணை : மரங்கள், பறவை, பூ
 (3) ஒன்றன்பால் : கதிரை, மரம், தேர்
 (4) பலவின்பால் : உடுக்கள்,பூச்சிகள்,மீன்கள்

**புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

32. பாடசாலையின் கற்பித்தற் செயற்பாடுகளை உள்ளக………………………. அவதானித்தது

(1) கணிப்பீட்டுக் குழு (2) மேற்பார்வைக் குழு
(3) மதிப்பீட்டுக் குழு (4) கணக்காய்வு குழு

33. அதிகரித்த தமது ஊதியத்தைத் தருமபடி வீதிகளில் இறங்கி ஆசிரியர்கள் ………… செய்தார்கள்

(1) ஆர்ப்பாட்டம் (2) போராட்டம்
(3) கலகம் (4) அகிம்சை

34. ஒருவர் இறந்த பின்னர் செய்யப்படும் சமய சம்பந்தமான கிரியை…………………….. எனப்படும்

(1) அந்தியோட்டிக் கிரியை (2) சாபிண்டீகக் கிரியை
(3) பூர்வயென்மக் கிரியை (4) ஈமக் கிரியை

**வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35. தனிமனிதர் பலர் தம்முள் ஒன்று கூடிய கூட்டமே சமூக அமைப்புக்கு

(1) அத்திவாரமானது (2) அத்திவாரம்
(3) அத்திவாரமாகின்றன (4) அத்திவாரமாகின்றது

.

36. மாணவதலைவர் தெரிவில் இடம்பெறுவதற்கு எங்களிற் பெரும்பாலானவர்கள் மன்றச் செயற்பாட்டையும் சிலர் களச்செயற்பாட்டையும் நான் விளையாட்டுச் செயற்பாட்டையும்

(1) வெளிப்படுத்தினர் (2) வெளிப்படுத்தினார்கள்
(3) வெளிப்படுத்தினோம் (4) வெளிப்படுத்தினேன்

**பின்வரும் பாடலை அடிப்படையாகக் கொண்டு அதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

கருமயில் ஆடக் குயிலினம் பாடக்
கவியினம் ஓடக் கரடிபுல்வாய்
பொருபுலிஆளித் திரள்மரைசாரற்
புறமுழைபதறிக் கொடுகிடவே
அருகுழைதவளக் குலவரைதகரத்
தடதிகிரியின் முத்துஉதிர் தரவே
சொரிமலர் அகிலப் பலமாமுறியச்
சோவெனமாரிபொழிந்ததுவே

37. இப்பாடலில் இடம்பெறும் காட்சி

(1) மழைக்காட்சி (2) மாலைக்காட்சி
(3) காலைக்காட்சி (4) மலைக்காட்சி

38. இப்பாடலில் இடம்பெறும் இலக்கணப் போலி

(1) குயிலினம் (2) முத்துதிர
(3) பொருபுலி (4) புல்வாய்

39. ஓட்டமெடுத்துக் கொண்டதெது?

(1) கவியினம் (2) மயிலினம்
(3) குயிலினம் (4) கரடியினம்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. இவற்றை ஒழுங்கு பெற வைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ. அதனைதமிழ் இசைநூல் பண்பாட்டை அடியொற்றி எழுதினார்.
ஆ. இதனால் இசை உலகில் திருப்பத்தை ஏற்படுத்தியது
இ. சுவாமி விபுலாநந்தரால் யாழ்நூல் எழுதப்பட்டது.
ஈ. இத்திருப்பம் இசைக்கருவியாளர்களுக்கு அடிப்படையாக அமைந்தது
உ. இசையுலகில் சுவாமி விபுலாநந்தர் போற்றப்பட்டவராகின்றார்

(1) உ, இ, ஆ, ஈ, அ (2) இ, உ, அ, ஆ, ஈ
(3) இ, அ, ஆ, ஈ, உ (4) உ, அ, ஆ, இ, ஈ

**(40 x 1 = 40 புள்ளிகள்)**